2

පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංකය : 79
ආයතනයේ නම : ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු ආයතන භාර අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 79
நிறுவன்த்தின் பெயர்: இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் நிறுவனங்களிற்கும் பொறுப்பான கௌரவ அமைச்சரின் அவதானிப்புகளும் மற்றும் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

Parliamentary Series No : 79
Name of the institution: Human Rights Commission of Sri Lanka
Submission of observations of the Hon. Minister in charge of the institutions and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No. 119(4)

රන්ජිත් උයන්ගොඩ
ලේකම්
ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව

பாராளுமன்ற தொடரிலக்கம் : 79

நிறுவனத்தின் பெயர் : இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

ஆண்டு : 2022

**Part 1 : 78.00**

| | குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள். | குறைபாடுகளை சரி செய்வதற்காக நிறுவனத்தினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்/ தற்போதைய முன்னேற்றம் |
|---|---|---|
| (i) | உள்ளக கணக்காய்வு ஐயவினா ஆவணம் கால அடிப்படையில் பராமரிக்கப்படவில்லை. | மனித உரிமைகள் ஆணைக்குழுவில் உள்ளக கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாக இருந்தமையினால் உள்ளக கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை.<br>2023 ஆம் ஆண்டில் அந்த வெற்றிடத்திற்காக உத்தியோகத்தர் ஒருவர் ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்டதுடன், தற்போது பயிற்சி நடவடிக்கைகளுடன் கடமைகளை மேற்கொண்டு வருகின்றார். |
| (ii) | ஆபத்துக்கள் பற்றிய பதிவேடு கால அடிப்படையில் பராமரிக்கப்படவில்லை. | 2022 ஆம் ஆண்டில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் உள்ளக கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாக இருந்தமையினால் ஆபத்துக்கள் தொடர்பான பதிவேடொன்று பேணி வரப்படவில்லை. அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| (iii) | உறுப்பினர்கள் கடன் பதிவேடு (c.c. 10) கால அடிப்படையில் பராமரிக்கப்படவில்லை. | மனித உரிமைகள் ஆணைக்குழுவானது திணைக்களமொன்றல்லாத காரணத்தினாலும், பகுதியளவு அரச நிறுவனமொன்றாக இருப்பதனாலும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பண “பி” கணக்கொன்று இல்லாததன் காரணத்தினால் அங்கத்தவர் கடன் பதிவேடொன்று (CC10) பேணி வரப்படுவதில்லை. திறைசேரியின் அங்கீகாரத்துடன் உத்தியோகத்தர்களுக்கான இடர் கடன்களைச் செலுத்துவதற்காக நிதி வழங்கப்பட்டுள்ளது.<br>அந்தக் கடன் தவணை முறையில் அறவிட்டுக்கொள்ளப்படுகின்றது. அறவிடப்படும் தொகை தனித் தனியாக பதிவேடொன்றில் குறித்துக்கொள்ளப்பட்டு பேணி வரப்படுகின்றது. சேகரிக்கப்படுகின்ற கடன் தொகையிலிருந்து மீண்டும் கடன் வழங்கப்படுகின்றது. |

ரஞ்சித் உயான்கொட

செயலாளர்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

| | |
|---|---|
| (iv) 2020.08.28 ஆம் திகதி 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பகுதி 1 இன் 11.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லைக்குள் நி.ஒ. 756 (6) இன் பிரகாரம் பொருள் கணிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு குறித்த தினத்தில் உரிய அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்படாமை. | 2020.08.28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 1 ஆம் பகுதியின் 11.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கால வரையறைக்குள் நி.பி. 756 (6) இன் பிரகாரம் இருப்புப் பொருட்கள் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படவில்லை என்ற விடயத்தை ஏற்றுக்கொள்கின்றேன். 2023 ஆம் ஆண்டிற்கான இருப்புப் பொருட்கள் கணக்கெடுப்பு 2024.06.27 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| ( v) வருடாந்த பொருள் கணிப்பாய்வு மூலம் வெளிக்கொணரப்பட்ட மிகைகள் பற்றாக்குறைகள் மற்றும் ஏனைய விதிப்புரைகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப் பகுதிகளில் மேற்கொள்ளப்படவில்லை. | வருடாந்த இருப்புப் பொருட்கள் கணக்கெடுப்பின்போது மேலதிகம் அல்லது குறைபாடு பற்றி அறிக்கைப்படுத்தப்படவில்லை. |
| (vi) அனைத்து வாகனங்களிலும் தேசிய சின்னம் வரையப்படவில்லை. | மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நிலவும் இரகசியத்தனமை மற்றும் பாதுகாப்பை அடிப்படையாகக்கொண்டு ஆணைக்குழுவின் பதவிநிலைத் தீர்மானமொன்றுக்கமைய அரச இலச்சினையை வர்ணப் பூச்சினால் பொறிக்காதிருப்பதற்கான தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. |
| (vii) நி.ஒ 94 (1) இன் படி செலவு விடயமொன்றுக்கு செய்யபட்டிருந்த ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட்ட பின்னர் ஆண்டிறுதியில் எஞ்சிய ஒதுக்கீடுகளின் வரம்பினை விஞ்சாதபடி பொறப்புக்கள் ஏற்கப்பட்டிருந்தது. | சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் கணக்கில் பதியப்பட்ட பொறுப்புக்களை மாத்திரம் பயன்படுத்தி பொறுப்புக்கள் பதிவேடு தயாரிக்கப்பட்டுள்ளது. இது சரி செய்யப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டுள்ளது. |
| (viii) வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகளை உரிய முறையில் பாராளுமன்றத்தில் சமரப்பிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்ப்படவிலைலை. | மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைக்குப் பதிலாக ஆண்டறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதனால் 2022 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையை தயாரித்து நிறைவு செய்து பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட வருகின்றது. |
| (ix) நிதி ஒழுக்குவிதி 134 (2) இன் பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதியுடன் கலந்தாலோசித்து வருட ஆரம்பத்தில் உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நி.பி. 134 (2) உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தை தயாரிக்க முடியாமைக்கு உள்ளக கணக்காய்வாளருக்கான வெற்றிடம் நிலவியமை காரணமாகும். |
| (x) ஆண்டிற்கு தேவையான எண்ணிக்கையிலான கணக்கு மற்றும் மேலாண்மை குழு கூட்டங்கள் நடாத்தப்படவில்லை. | 2022 ஆம் ஆண்டு உள்ளக கணக்காய்வாளருக்கான வெற்றிடம் நிலவியமையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்கள் நடாத்தப்படவில்லை. 2023 ஆம் ஆண்டில் உள்ளக கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டுள்ளமையின் பின்னர் முதலாவது கூட்டம் நடாத்தப்பட்டது. |

ரஞ்சித் உயான்கொட
செயலாளர்
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

**Part 2: 42.00**

| | | |
|---|---|---|
| (i) | நிறுவனத்தில் பேணிவரப்படுகின்ற வெப்தளம் மூலமாக பொதுமக்களுக்கு முறைப்பாடுகள் அல்லது பாராட்டுக்களை குறிப்பு பதிவதற்காக வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை. | இணையத்தளத்தில் "எம்மை அழையுங்கள்" இன் கீழ் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. |
| (ii) | ஓட்டுமொத்த பணியாட்தொகுதியும் உள்ளடங்கத்தக்கதாக செயலாற்றுகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | செயலாற்றுகை ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. |
| (iii) | நிறுவனம் தனது விடயப்பரப்பிற்கிணங்க நிலைபெறுதகு நோக்கங்களை இணங்கண்டிருக்கவில்லை. | நிறுவனத்தின் விடயப் பரப்புக்கமைய நிலைபேறான (பேண்தகு) இலக்குகள் இனங்காணப்பட்டு வருகின்றன. உடனடியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| (iv) | அடையாளம் காணப்பட்ட நிலையான இலக்குகளை அடைவதற்கான வழிமுறைகள் தீர்மானிக்கப்படவில்லை. | நிறுவனத்தின் விடயப் பரப்புக்கமைய நிலைபேறான (பேண்தகு) இலக்குகள் இனங்காணப்பட்டு வருகின்றன. உடனடியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| (v) | நிலையான அபிவிருத்தி இலக்குகளை அமுல்படுத்துவதற்கான முன்னேற்றத்தை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் அமைக்கப்படவில்லை. | நிறுவனத்தின் விடயப் பரப்புக்கமைய நிலைபேறான (பேண்தகு) இலக்குகள் இனங்காணப்பட்டு வருகின்றன. உடனடியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| (vi) | திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புக்கள் மூலமாக வழங்கப்பட்டிருந்த பயிற்சி வாய்ப்புகளின் அளவு 50% ஐ பார்க்கிலும் தாழ்ந்த மட்டத்திலேயே நிலவியது. | செலவுகள் முகாமைத்துவ சுற்றறிக்கைகளுக்கமைய அத்தியாவசியப் பயிற்சியளிப்புக்கள் மாத்திரம் வழங்கப்பட்டன. |

ரஞ்சித் உயான்கொட
செயலாளர்
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

| | |
|---|---|
| (vii) கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லை. | நடைமுறைப்படுத்துவதற்கு முடியுமான பரிந்துரைகள் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. ஏனைய பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| (viii) 2020.08.28 ஆம் திகதியிடப்பட்ட 02/2020 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் பந்தி 12.1 இன் பிரகாரம் முன்னேற்றத்தை அளவிடக்கூடிய 03 செயல்திறன் குறிகாட்டிகள் அடையாளம் காணப்படவில்லை. | பதவிநிலைத் தீர்மானமொன்றை எடுப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| (ix) அதிகபட்ச சேவைக் காலத்தை நிறைவு செய்த அதிகாரிகளை முறையாக இடமாற்றம் செய்யப்படவில்லை. | ஆணைக்குழுவானது பகுதியளவு அரச நிறுவனமொன்றாகும். இடமாற்றல்களின்போது, பிள்ளைகளை பாடசாலையில் சேர்த்தல், உத்தியோகபூர்வ இல்ல வசதிகள் இல்லாமை போன்ற அரசாங்க இடமாற்றல் கொள்கையின் கீழ் காணப்படும் வசதிகள் மற்றும் அனுகூலங்களைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாது. அந்தந்த மாகாணங்களுக்கு ஆட்சேர்த்துக்கொள்ளும்போது அந்தப் பிரதேசத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கி ஆட்சேர்த்துக்கொள்ளல் மற்றும் வரையறுக்கப்பட்ட ஆளணியொன்று காணப்படுதல் காரணமாகும். |

ரஞ்சித் உயான்கொட
செயலாளர்
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு